**ஆகஸ்ட் – 31**

# TNPSC துளிகள்


- NLC இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான பிரசன்ன குமார் மோட்டுப்பள்ளிக்கு ''Top Rankers அமைப்பின் சிறப்பு விருதான ஆண்டின் சிறந்த தலைமை நிர்வாக அதிகாரி விருது' வழங்கப்பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு FIDE உலகக் கோப்பை போட்டியானது, இந்தியாவின் கோவாவில் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 30 முதல் நவம்பர் 27 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.
- இந்தியா தனது முதல் மூன்றாம் தலைமுறை கூட்டாண்மைத் திட்டம் (3GPP) ரேடியோ அணுகல் வலையமைப்பு (RAN) கூட்டங்களை பெங்களூருவில் நடத்தியது.
- GMCH ஓமந்தூரார் எஸ்டேட், திருவண்ணாமலை GMCH, தேனி GMCH, கன்னியாகுமரி GMCH மற்றும் திருவள்ளூர் GMCH உள்ளிட்ட தமிழ்நாட்டில் உள்ள ஐந்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் (GMCH), மருத்துவமனைகள் மற்றும் சுகாதார வழங்குநர்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்திடமிருந்து (NABH) சான்றிதழைப் பெற்றுள்ளன.
- புதிய மேம்பாட்டு வங்கி (NDB) ஆனது டாக்டர் இராஜீவ் ரஞ்சனை அதன் துணைத் தலைவராகவும் தலைமை இடர் மேலாண்மை அதிகாரியாகவும் நியமித்துள்ளது.
- 'Secession of the Successful: The Flight Out of New India' என்ற புத்தகத்தினை சஞ்சயா பாரு எழுதியுள்ளார்.
- மிகப்பெரிய மற்றும் நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பன்னாட்டு ராணுவப் பயிற்சிகளில் ஒன்றான '19வது பிரைட் ஸ்டார் 2025' பயிற்சியானது எகிப்து நாட்டில் 43 நாடுகளின் பங்கேற்புடன் நடைபெறுகிறது.
- ஆரோக்ய சேது பயிற்சியானது, அசாமில் உள்ள டும்டுமா எனுமிடத்தில் உள்ள ருபாய் பகுதியில் இந்திய இராணுவத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
    - இது பல்வேறு இராணுவப் படைகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான இது போன்ற முதல் வகையான குடிமை-இராணுவ மருத்துவ இணைவுப் பயிற்சியைக் குறிக்கிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## இந்தியாவின் தொழிற்சாலை மையம் - தமிழ்நாடு

- 2023–2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்திரத் தொழில்துறை கணக்கெடுப்பின்படி, தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் தமிழ்நாடு நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பை மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 ஆம் தேதியன்று வெளியிட்டது.
- இந்தியா முழுவதும் உள்ள தொழிற்சாலைகளில் மொத்தம் 1,95,89,131 பேர் பணி அமர்த்தப் பட்டுள்ளனர்.
- இந்தியாவின் மொத்தத் தொழிற்சாலை வேலைவாய்ப்பில் தமிழ்நாடு 15.24% பங்களிப்பை வழங்குகிறது.
- அதற்கு அடுத்தபடியாக 13.07% பங்குடன் குஜராத் மாநிலமும், அதனைத் தொடர்ந்து 12.95% பங்குடன் மகாராஷ்டிராவும் இடம் பிடித்துள்ளன.

- மொத்தத் தொழில்துறை பணியாளர் வளத்தில் உத்தரப் பிரதேசம் 8.30% மற்றும் கர்நாடகா 6.29% பங்கினைக் கொண்டுள்ளன.
- இந்தியாவில் உள்ள 2,60,061 தொழிற்சாலைகளில், தமிழ்நாடு 15.43% பங்குடன் அதிக பட்சப் பங்களிப்பைக் கொண்டுள்ளது.
- குஜராத் மொத்தத் தொழிற்சாலைகளில் 12.81% பங்குடன் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- மகாராஷ்டிரா 10.20% பங்குடனும், அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் 8.51% மற்றும் ஆந்திரப் பிரதேசம் 6.16% பங்குடனும் இடம் பெற்றுள்ளன.
- நிலையான மூலதனத்தில் தமிழ்நாடு 8.09% பங்குடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- தேசிய அளவிலான பங்கில் 10.11% பங்குடன் உற்பத்தியில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- மொத்த மதிப்புக் கூட்டலில் 10.26% பங்களிப்புடன் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பிடித்தது.





# தேசியச் செய்திகள்


## ஆயுதப்படை ஒருங்கிணைப்புக்கான கோட்பாடுகள்

- ஆயுதப்படை ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக இந்தியா மூன்று கூட்டுக் கோட்பாடுகளை வெளியிட்டது.
- இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை பிரிவினரிடையே ஒருங்கிணைந்த இயங்குந்தன்மையை மையமாகக் கொண்ட சிறப்புப் படைகளின் (SF) செயல்பாட்டுக் கோட்பாட்டை CDS வெளியிட்டுள்ளது.
- SF கோட்பாட்டில் கூட்டுப் பயிற்சி, பயிற்சிப் பள்ளிகளைக் கூட்டுப்படைப் பயிற்சி நிறுவனங்களாக மேம்படுத்துதல் மற்றும் நடைமுறைகளைச் சீர் தரப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.
- தொழில்நுட்ப ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும் செயல்பாட்டுத் தயார்நிலைக்கான கூட்டுப் பயிற்சியை மேம்படுத்தவும் வான்வழி மற்றும் ஹெலிபோர்ன் நடவடிக்கைகளுக்கான ஒரு கோட்பாடு வெளியிடப்பட்டது.
- நிலம், கடல், வான்வழி, விண்வெளி மற்றும் இணையவெளிக் களங்களில் ஒருங்கிணைந்த நடவடிக்கைக்கான பல்துறைச் செயல்பாட்டுக் கோட்பாட்டைப் பாதுகாப்பு அமைச்சர் வெளியிட்டார்.

- மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் கூட்டு உத்திகளைப் பயன்படுத்திக் கொள்ளும் திறன் கொண்ட ஒரு நெகிழ்திறன் மிக்க, விரைவு திறனுடைய படையை உருவாக்குவதே இந்த கோட்பாடுகளின் நோக்கமாகும்.
- இந்த ஆவணங்கள் இந்தியாவின் ஆயுதப் படைகளின் எதிர்காலக் கூட்டுத் திட்டமிடல், செயலாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான அடித்தளத்தை அமைக்கின்றன.




## தேசிய ஒருங்கிணைந்த உயிரி மேம்பாட்டு மையங்களின் வலையமைப்பு





- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகமானது, இந்தியாவின் முதல் தேசிய பயோ ஃபவுண்ட்ரி வலையமைப்பினைத் தொடங்கியது.
- இந்த வலையமைப்பில், கருத்துருவின் ஆதார மேம்பாடுகளை மதிப்பிடுதல், உள்நாட்டு உயிரி உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட ஆறு நிறுவனங்கள் அடங்கும்.
- இந்தியாவின் உயிரி மேம்பாட்டு மையங்களின் பொருளாதாரம் ஆனது 2014 ஆம் ஆண்டில் 10 பில்லியன் டாலரில் இருந்து 2024 ஆம் ஆண்டில் 165.7 பில்லியன் டாலராக வளர்ந்தது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் உயிரி மேம்பாட்டு மையங்களின் பொருளாதாரத்தை 300 பில்லியன் டாலர்களாக அதிகரிக்க அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## தனிநபர் வருமான வரி வசூல்

- தனிநபர் வருமான வரி வசூல் ஆனது, இந்தியாவின் வரலாற்றில் முதல் முறையாக பெருநிறுவன வரிகளை விஞ்சியுள்ளது.
- 2014 ஆம் நிதியாண்டில் 38.1 சதவீதமாக இருந்த மொத்த நேரடி வரிகளில் தனிநபர் வருமான வரியின் பங்கு 2024 ஆம் நிதியாண்டில் 53.4 சதவீதமாகக் கடுமையாக உயர்ந்தது.
- அதே காலக் கட்டத்தில் பெருநிறுவன வரிகள் 61.9 சதவீதத்திலிருந்து 46.6 சதவீதமாகக் குறைந்துள்ளன.
- தனிநபர் வருமான வரித் தாக்கல் செய்பவர்களின் எண்ணிக்கை 2.3 மடங்கு அதிகரித்து, 2014 ஆம் நிதியாண்டில் 30.5 மில்லியனிலிருந்து 2023 ஆம் நிதியாண்டில் 69.7 மில்லியனாக உயர்ந்துள்ளது.
- சரக்கு மற்றும் சேவை வரி செலுத்துவோரின் எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டில் 12.4 மில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டில் 14.7 மில்லியனாக உயர்ந்துள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நியூ வேர்ல்ட் திருகுப்புழு பாதிப்பு

- அமெரிக்காவில் மனிதர்களில் முதன்முதலில் நியூ வேர்ல்ட் திருகுப்புழு பாதிப்பு இருப்பது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 04 ஆம் தேதியன்று உறுதி செய்யப்பட்டது.
- நியூ வேர்ல்ட் திருகுப்புழுக்கள் என்பது அறிவியல் ரீதியாக கோக்லியோமியா ஹோமினிவோராக்ஸ் என்று அழைக்கப்படுகின்ற நீல-சாம்பல் நிறச் சதை ஈக்கள் ஆகும்.
- பெண் திருகுப்புழுக்கள் மனிதர்கள் உள்ளிட்ட சூடான ரத்தம் கொண்ட விலங்குகளின் திறந்த காயங்களில் முட்டையிடுகின்றன.
- ஒரு பெண் திருகுப்புழு ஒரு நேரத்தில் 300 முட்டைகள் வரையில் மற்றும் அதன் 10-30 நாட்கள் வரையிலான அதன் ஆயுட்காலத்தில் 3,000 வரை முட்டையிடும்.
- உயிருள்ளத் திசுக்களை உண்கின்ற லார்வாக்கள், சிகிச்சை அளிக்கப்படாவிட்டால்

செப்சிஸ் போன்ற பாதிப்புகள் ஏற்படுவதற்கான அதிக ஆபத்து கொண்ட வலிமிகுந்த தொற்றுகளை ஏற்படுத்துகின்றன.

- இதற்கான அறிகுறிகளில் ஆறாத காயங்கள், இரத்தப்போக்கு, துர்நாற்றம் மற்றும் தோலில் லார்வாக்கள் அசையும் உணர்வு ஆகியவை அடங்கும்.
- மலட்டுப் பூச்சி நுட்பத்தைப் பயன்படுத்தி அமெரிக்கா 1966 ஆம் ஆண்டில் திருகுப்புழு பாதிப்பினை ஒழித்தது.
- சமீபத்திய பாதிப்புகள் பனாமா, கோஸ்டாரிகா, நிகரகுவா மற்றும் ஹோண்டுராஸ் பகுதிகளில் ஏற்பட்டுள்ளன.





## குலசேகரப்பட்டினம் ஏவு வளாகம்




- தூத்துக்குடி மாவட்டம், குலசேகரப்பட்டினத்தில் உள்ள புதிய ஏவு வாகன ஏவுதளம் ஆனது, ஒவ்வோர் ஆண்டும் 20 முதல் 25 செயற்கைக்கோள் ஏவுதலைக் கையாளும்.
- தற்போது, இஸ்ரோ ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தை (SDSC) இயக்குகிறது.
- துருவ செயற்கைக்கோள் ஏவு வாகனம் (PSLV) மற்றும் புவி ஒத்திசைவு செயற்கைக் கோள் ஏவு வாகன (GSLV) செயற்கைக் கோள்கள் SDSC தளத்திலிருந்து ஏவப்படுகின்றன.

- ஏவு திறனை அதிகரிப்பதற்காக இந்தியாவின் இரண்டாவது ஏவு வளாகம் ஆனது குலசேகரப்பட்டினத்தில் கட்டமைக்கப்பட்டு வருகிறது.
- இந்தத் திட்டமானது 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்டது.
- ஏவு வாகன ஏவுதளத்தின் கட்டுமானம் ஆனது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 ஆம் தேதியன்று 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடங்கப்பட்டது.
- சிறிய செயற்கைக்கோள் ஏவு வாகனத்தினைப் (SSLV) பயன்படுத்தி ஏவு வாகனங்கள் விண்ணில் ஏவப்படும்.
- ஸ்ரீஹரிகோட்டாவில் தற்போது செயல்பாட்டில் உள்ள இரண்டு ஏவுதளங்கள் உள்ளன என்ற நிலையில் மூன்றாவது ஏவு தளம் SDSC தளத்தில் சுமார் 4 கோடி ரூபாய் செலவில் கட்டுமானத்தில் உள்ளது.
- 500 கிலோகிராம் வரை எடையுள்ள ஏவு வாகனங்கள் குலசேகரப்பட்டினத்திலிருந்து ஏவப்படும்.
- இஸ்ரோ மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகிய இரண்டும் புதிய தளத்திலிருந்து ஏவு வாகனங்களை ஏவும்.
- 2026 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் குலசேகரப்பட்டினத்திலிருந்து ஏவு வாகனங்களின் ஏவுதல்களைத் தொடங்க இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

## 3I/ATLAS





- சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள் ஆனது இயற்கையான வானியற் அமைப்பாக இல்லாமல் ஒரு செயற்கைப் பொருளாக இருக்கலாம்.
- தற்போது 3I/Atlas என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் பொருள், வால் நட்சத்திரம் அல்லது விண்கல் போன்றவற்றிலிருந்து வேறுபட்ட பண்புகளைக் கொண்டிருப்பதாக நம்பப் படுகிறது.
- 3I/Atlas என்பது 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ATLAS ஆய்வு தொலைநோக்கியால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு வால் நட்சத்திரம் ஆகும்.
- இது சூரிய மண்டலத்தின் வழியாகப் பயணிப்பதாக உறுதி செய்யப்பட்ட மூன்றாவது விண்மீன் மண்டல அமைப்பாகும்.
- முதலாவது 2017 ஆம் ஆண்டில் தென்பட்ட 1I/'Oumuamua, இரண்டாவது 2019 ஆம் ஆண்டில் தென்பட்ட 2I/Borisov ஆகும்.

- பூமியிலிருந்து குறைந்தது 1.6 வானியல் அலகுகள் தொலைவில் இருக்கும் இது ஒரு அச்சுறுத்தலாக இருக்காது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## நிலக்கரி மாசுபாடு




- "Regulating Coal Operations: Environmental and Social Impacts through the Lens of the National Green Tribunal" என்ற தலைப்பிலான அறிக்கையை விகல்பா என்ற இலாப நோக்கமற்ற அமைப்பு வெளியிட்டது.
- 2022-23 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த மின் உற்பத்தியில் நிலக்கரியின் பங்கு 73 சதவீதமாக இருந்தது.
- இது 2031-32 ஆம் ஆண்டிற்குள் மின் உற்பத்தியில் இதன் பங்கு சுமார் 50 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- நிலக்கரிச் சுரங்கம் மற்றும் அனல் மின் நிலையங்கள் காற்று, நீர் மற்றும் ஒலி மாசுபாட்டையும் நிலங்களின் தரமிழப்பினையும் ஏற்படுத்துகின்றன.
- நிலக்கரி காணப்படும் பகுதிகளில் நிலக்கரி போக்குவரத்திலிருந்து வெளிவரும் தூசி மாசுபாடு PM10 அளவை ஒரு கன மீட்டருக்கு 460 மைக்ரோகிராமாக அதிகரித்தது.
- இது அனுமதிக்கப்பட்ட வரம்பை விட ஐந்து மடங்கு அதிகமாகும்.
- தமிழ்நாட்டின் எண்ணூர் பகுதியில், ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வெள்ளப்பெருக்கு சமவெளிகளில் எரிசாம்பல் அடைப்பு ஏற்படுவதால், அங்கு நீர் தேங்கி மற்றும் வெள்ள அபாயத்தை ஏற்படுத்துகிறது.
- எரி சாம்பலில் உள்ள நச்சுக் கூறுகள் சிலிகோசிஸ், புற்றுநோய் மற்றும் நரம்பியல் நோய்களின் அபாயத்தை அதிகரித்துள்ளன.
- எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு அருகில் காணப்படும் காட்மியம் மற்றும் ஈயம் போன்ற கன உலோகங்களின் மாசுபாடு குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு அதிகப் புற்றுநோய் அபாயத்தை ஏற்படுத்தின.
- எண்ணூரில் உள்ளவை உட்பட பல நிலக்கரி ஆலைகள், உமிழ்வுத் தரவைத் தவறாகப் பதிவு செய்து மாசுக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறியுள்ளன.

# முக்கிய தினங்கள்

## உலக ஏரி தினம் 2025 - ஆகஸ்ட் 27

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் அனுசரிப்பானது முதலாம் ஆண்டு அனுசரிப்பினைக் குறித்தது.
- ஏரிகளின் முக்கியத்துவம் மற்றும் ஏரி மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றுச்சூழல் அமைப்புகளின் நிலையான மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- பூமியில் 117 மில்லியனுக்கும் அதிகமான ஏரிகள் உள்ளன என்ற நிலையில் அவை புவியின் நிலப்பரப்பில் சுமார் 4 சதவீதப் பரப்பினை உள்ளடக்கியுள்ளன.




# இதரச் செய்திகள்

## இந்தியாவில் கூடுதல் தனியார் பயிற்சி முறை

- தேசிய மாதிரிக் கணக்கெடுப்பின் (NSS) 80வது சுற்றின் ஒரு பகுதியாக கல்வி குறித்த சமீபத்திய விரிவான மாதிரி ஆய்வு (CMS) நடத்தப்பட்டது.
- இன்றளவும் நாடு தழுவிய அளவில் அரசுப் பள்ளிகளில் பெரும்பாலான மாணாக்கர்கள் சேர்கின்றனர் என்ற நிலையில் இது மொத்த மாணவர் சேர்க்கையில் 55.9% ஆகும்.
- கிராமப்புறங்களில் இருந்து, கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு குழந்தைகள் அரசு கல்வி நிறுவனங்களில் பயில்கின்றனர்.
- இதற்கு நேர்மாறாக, நகர வாழ் குழந்தைகளில் 30.1% மட்டுமே அரசுப் பள்ளிகளில் பயில்கின்றனர்.
- 33% மாணாக்கர்கள் வகுப்பறைகள் அல்லது கூடுதல் பயிற்சி நிறுவனங்களுக்கு அப்பால் தனியார் பயிற்சியை சார்ந்துள்ளனர்.
- "கூடுதல் தனியார் பயிற்சி" என்பது வழக்கமானப் பள்ளி நேரத்திற்கு அப்பால் மாணாக்கர்கள் மேற்கொள்ளும் கூடுதல் தனியார் பயிற்சியைக் குறிக்கிறது.
- இந்தப் பயிற்சிகள் வகுப்பறை கற்றலை வலுப்படுத்துவது, மாணாக்கர்களைத்

தேர்வுகளுக்குத் தயார்படுத்துவது அல்லது அவர்களுக்கு ஒரு போட்டித்தன்மையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

**Table 1: % Children enrolled in different types of schools. By age group and sex. 2024**

| Age group and sex | Govt | Pvt | Other | Not in school | Total |
|---|---|---|---|---|---|
| Age 6-14: All | 66.8 | 30.6 | 0.7 | 1.9 | 100 |
| Age 7-16: All | 66.0 | 30.8 | 0.7 | 2.5 | 100 |
| Age 7-10: All | 67.5 | 30.7 | 0.7 | 1.2 | 100 |
| Age 7-10: Boys | 64.3 | 33.8 | 0.7 | 1.2 | 100 |
| Age 7-10: Girls | 70.7 | 27.4 | 0.6 | 1.3 | 100 |
| Age 11-14: All | 66.5 | 30.8 | 0.7 | 2.1 | 100 |
| Age 11-14: Boys | 63.4 | 34.1 | 0.7 | 1.9 | 100 |
| Age 11-14: Girls | 69.6 | 27.5 | 0.7 | 2.3 | 100 |
| Age 15-16: All | 60.3 | 31.3 | 0.6 | 7.9 | 100 |
| Age 15-16: Boys | 57.9 | 33.8 | 0.6 | 7.7 | 100 |
| Age 15-16: Girls | 62.4 | 28.9 | 0.6 | 8.1 | 100 |

'Other' includes children going to Madarsa or EGS.
'Not in school' includes children who never enrolled or have dropped out.

## MAR-a-THON 2025 ஹேக்கத்தான்




- MAR-a-THON 2025 ஆனது துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.
- இது என்பது ஒரு தேசியக் கடல்சார் ஹேக்கத்தான் ஆகும்.
- இது சாகர்மாலா புத்தொழில் புதுமை முன்னெடுப்பின் ஒரு பகுதியாகும்.
- இந்த முன்னெடுப்பானது ஆராய்ச்சி, புதுமை, புத்தொழில்கள் மற்றும் தொழில் முனைவோரை ஆதரிக்கிறது.

## டெரியர் சைபர் குவெஸ்ட் 2025




- முக்கியமான பாதுகாப்பு மற்றும் இணையவெளிப் பாதுகாப்பு சிக்கல்களை நிவர்த்தி செய்வதற்காக இந்திய இராணுவமானது டெரியர் சைபர் குவெஸ்ட் 2025 என்ற நிகழ்வினைத் தேசிய அளவிலான சவாலாக அறிமுகப்படுத்தியது.
- இந்த நிகழ்வை இந்திய இராணுவம், சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், இந்திய இராணுவ ஆராய்ச்சி மையம் (IARC) மற்றும் சைபர்பீஸ் ஆகியவை இணைந்து புது டெல்லியில் ஏற்பாடு செய்துள்ளன.
- மாதிரி உருவகப்படுத்தப்பட்ட இராணுவச் சூழலுக்குள் BOSS லினக்ஸில் (பாரத் இயக்க முறைமைத் தீர்வுகள்) பாதிப்புகளைக் கண்டறிவதில் இந்த 36 மணி நேரப் பிழை கண்டறியும் ஆய்வு சவாலில் கவனம் செலுத்துகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★